வலயக் கல்வி காரியாலயம் - பலாங்கொடை

# பெயர்ச்சொற்கள்


தயாரித்தவர்

எஸ். ஏ உமாரா

இ/ப/ பெட்டிகல தமிழ் வித்தியாலயம்

# பெயர்ச்சொல் என்றால் என்ன?

ஒன்றின் பெயரைக் குறிப்பது **பெயர்ச்சொல்** ஆகும்:

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடிப்படையில் **பெயர்ச்சொற்கள்** தோன்றும்.

உதாரணம் : கதிரை, மரம், கமலன், மேசை

முந்நிய வகுப்புக்களில் பெயர்ச்சொற்கள் பற்றி கற்றவற்றை நினைவுபடுத்திக்கொள்வோம்.

## பெயர்ச்சொற்களின் பண்புகள்

- ❖ **ஒன்றின் பெயரைக் குறிக்கும்.**

உதா : கதிரை, மரம், கமலன், மேசை

- ❖ **வேற்றுமை உருபை ஏற்கும்.**

உதா : மரம், மரத்தால், மரத்தை

- ❖ **பெயரடைகளுன் பொருத்தமானவற்றை ஏற்கும்.**

உதா : நல்ல புத்தகம், புதிய வீடு

- ❖ **பெயர்ச்சொற்கள் பொதுவாக எண், வினா, சுட்டு அடைகளை ஏற்கும்.**

உதா :ஒரு மனிதன், கொஞ்ஞும் தண்ணீர் ,அந்த மனிதன்

பெயர்ச்சொற்கள் 6 வகைப்படும்.

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. பண்புப்பெயர்
6. தொழிற்பெயர்

இவற்றை தரம் 6இல் கற்றிருப்பீர்கள்.

பின்வருன பெயர்ச்சொல் வகைகளில் சிலவாகும்.

1.மாற்றுப்பெயர்

2.கூட்டுப்பெயர்

3.தொழிற்பெயர்

4.வினையாலணையும்பெயர்

5.ஆக்கப்பெயர்

இனி இவற்றை விரிவாக பார்ப்போம்.

## 1.மாற்றுப்பெயர்

ஒரு பெயர்ச்சொல்லுக்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய பெயர்ச்சொல் மாற்றுப்பெயர் எனப்படும்.

உதா : நான், நீ, அவன், அவள், யார்

## 2.கூட்டுப்பெயர்

இரண்டு அல்லது பல சொற்களை இணைத்து உருவாக்கப்படும் பெயர்ச்சொல் கூட்டுப்பெயர் எனப்படும்.

உதா : பாடசாலை, மின்சாரம், நீர்வீழ்ச்சி, வானொலி

இதனை மேலும் விளங்க

**பெயர் + பெயர் = கூட்டுப்பெயர்**

வான் + ஒலி = வானொலி

மின் + சாரம் = மின்சாரம்

## 3.தொழிற்பெயர்

ஒரு வினையை அல்லது செயலை குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

உதா : பாய்தல்,செய்தல் ,நடத்தல் ,விழுதல் ,பார்த்தல்

## 4.வினையாலணையும்பெயர்

வினையடியாக வந்து வினையையும், காலத்தையும், வினை செய்யும் கருத்தாவையும் உணர்த்தும் பெயர் வினையாலணையும்பெயர் எனப்படும்.

உதா : வந்தவன், வந்தவர், வந்தது, வந்தவை

இவ் உதாரணங்கள் **வருதல்** என்னும் வினையையும் இறந்த காலத்தையும் வினையை செய்தவரையும் உணர்த்துகின்றன.

## 5.ஆக்கப்பெயர்

பெயர் அல்லது வினைச்சொற்களுடன் விகுதிகளைச் சேர்த்து ஆக்கப்படும் பெயர்ச்சொற்கள் ஆக்கப்பெயர்கள் எனப்படும்.

உதா : தொழிலாளி ,புத்திசாலி, கடைக்காரன் ,சமத்துவம் நடிப்பு , பயிற்சி, உயர்வு ,அறிக்கை, இனிமை

இவற்றில் **ஆளி**, **சாலி**, **காரன் துவம்** ,**ப்பு**, **சி**, **வு**, **க்கை**, **மை** போன்ற பெயர், வினை விகுதிகள் சேர்ந்து ஆக்கப்பெயர்கள் உருவாகிஉள்ளன.

## பின்வரும் பயிற்சியை செய்து பாருங்கள்

பின்வரும் பெயர்ச்சொற்களை உரிய அட்டவணைக்குள் எழுதுக.

நடத்தல், நீர்வீழ்ச்சி, விழுதல், நடிப்பு ,பார்த்தல், அறிக்கை, இனிமை, தொழிலாளி ,வந்தவன், வானொலி,வந்தவர்,புத்திசாலி, கடைக்காரன், மின்சாரம், அவன்,புகைவண்டி,அவள்,பாடசாலை, முதலாளி,ஓடுதல், திறமைசாலி, சகோதரத்துவம்.

| ஆக்கப் பெயர் | கூட்டுப் பெயர் | மாற்றுப் பெயர் | தொழிற் பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

# நன்றி